**STARTING TIME 10.58 A.M**

**IN THE COURT OF THE SPECIAL SUBORDINATE JUDGE (LAOP CASES), ARAKKONAM.**

**O.S. No. 05/2025**

Deposition of **P.W.2** witnesses for Plaintiff Solemnly affirmed by Tr. R. Suresh Babu, Assistant of this court, on 06.06.2025 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : **முரளிதரன்** Father's Name :

Address :

Calling : Age :

**2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

8. நான் என்ன படித்துள்ளேன் என்றால், 9ம் வகுப்பு படித்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் ஆவணம் கடந்த 25.08.1977 அன்று எனது தாத்தா கண்ணன் என்கிற புண்ணியகோட்டி முதலியார் மற்றும் அவர் மகன்களான ரத்தினவேல், திருநாவுக்கரசு மற்றும் பாலகிருஷ்ணன் ஆகியோர்கள் சர்வே எண் 88/2–ல் 10 செண்ட் விஸ்தீரண சொத்தினை நேதாஜி என்பவருக்கு கிரையம் செய்து கொடுத்த கிரைய பத்திரத்தின் அசல் ஆவணம் என்றால், சரிதான். மேற்படி ஆவணம் **பி.வா.சா.ஆ–1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

9. என்னிடம் காட்டப்படும் ஆவணம் கடந்த 12.011.1966 அன்று கண்ணன் என்கிற புண்ணியகோட்டி முதலியார் பெயருக்கு மாணிக்க முதலியார் எழுதி

வைத்த செட்டில்மெண்ட் பத்திரத்தின் அசல் ஆவணம் என்றால், சரிதான். மேற்படி ஆவணம் **<u>பி.வா.சா.ஆ–2</u>** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி ஆவணத்தை சர்வே எண் 88–ல் 35 செண்ட் விஸ்தீரணம் எழுதப்பட்டுள்ளது என்றால், சரிதான். அதன்பின்னிட்டு எனது தாத்தாவும் அவரது மகன்களும் கடந்த 29.08.1977 அன்று ஒரு பாகப்பிரிவினை பத்திரம் எழுதி கொண்டார்கள் என்றால், சரியல்ல.

10. என் தகப்பனார் மற்றும் அவர் உடன் பிறந்தவர்கள் பெருமாள் என்பவருக்கு 30.01.1977 அன்று விற்பனை செய்த 10 செண்ட் சொத்திற்கான கிரைய தொகையை எனது பெரியப்பாவான 1ம் பிரதிவாதி ரத்தினவேல் என்பவருக்கு கொடுத்துவிட்டார்கள் என்றால், சரியல்ல. அதே போல், பி.வா.சா.ஆ–1 ஆவணம் மூலம் நேதாஜி என்பவருக்கு விற்பனை செய்த 10 செண்ட் சொத்திற்கான கிரைய தொகையை எனது தகப்பனாருக்கு கொடுத்துள்ளார்கள் என்றால், சரியல்ல. அந்த காரணத்தால் தான் 29.08.1977 தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் எ– அட்டவணையில் எனது தாத்தாவுக்கு 5 செண்ட் நிலமும், பி, சி– அட்டவணையில் எனது பெரியப்பா மற்றும் தகப்பனாருக்கு கிரைய தொகை பாகமாக ஒதுக்கப்பட்டும், மீதி உள்ள சொத்து டி– அட்டவணையில் 2ம் பிரதிவாதிக்கு பாகமாக ஒதுக்கப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. எனவே, 2ம் பிரதிவாதிக்கு தாவா சர்வே எண்ணில் 20 செண்ட் உரிமை உள்ளது என்றால், சரியல்ல.

11. எவ்வளவு அளவில் வீடு கட்டி உள்ளோம் என்றால், கூட்டாக இருந்த போது 32 அடி நீளம், 16 அடி அகலத்தில் வீடு கட்டி உள்ளோம். அந்த வீடு எப்போது கட்டப்பட்டது என்றால், சுமார் 40 வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்டது. நான் கட்டியுள்ள வீடானது எனது தாத்தாவிற்கு பாகமாக ஒதுக்கப்பட்ட 5 செண்டில் கட்டப்பட்டுள்ளது என்றால், எனது தாத்தாவிற்கு பாகம் எதுவும்

ஒதுக்கவில்லை, ஆனால் மூவருக்கும் கூட்டாக பாத்தியப்பட்ட இடத்தில் தான் வீடு கட்டியுள்ளோம்.

12. தாவா சொத்து விவரத்தில் நாங்கள் கட்டியுள்ள வீட்டின் அளவையும், அந்த வீடு அமைந்துள்ள இடத்திற்கான வரைபடத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். தாவா சொத்து விவரத்தில் உள்ள சர்வே எண்கள் 88/1A, 1B, 1C–ன் தனிப்பட்ட விஸ்தீரணத்தை குறிப்பிடவில்லை என்றால், சரிதான். சர்வே எண் 88–ன் மொத்த விஸ்தீரணம் ஏக்கர் 1.43 செண்ட் என்றால், சரிதான். அதில், 4 எல்லைகளை குறிப்பிட்டு 35 செண்ட் விஸ்தீரணத்தை மட்டும் தான் எனது கொள்ளு தாத்தா வா.சா.ஆ–1/பி.வா.சா.ஆ.2 மூலம் செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளார் என்றால், சரிதான். மேற்படி ஏக்கர் 1.43 செண்டில் மேற்படி 35 செண்ட் தவிர மீதி விஸ்தீரணம் எதுவும் எனது தாத்தாவிற்கோ, அல்லது எனது தகப்பனார் மற்றும் அவர் உடன் பிறந்தவர்களுக்கோ சொந்தமானது இல்லை என்றால், சரிதான்.

13. 2ம் பிரதிவாதி அவருக்கு சொந்தமான சொத்தில் 909 சதுர அடி விஸ்தீரண சொத்தை 3ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்துள்ளார் என்றால், அதுபோல் எதையும் விற்பனை செய்யவில்லை, 25 செண்டும் கூட்டாக தான் உள்ளது. தாவா சொத்து விவரத்தில் உள்ள அந்த 25 செண்டிற்கு உண்டான 4 எல்லைகளை குறிப்பிடவில்லை என்றால், சரிதான். பி.வா.சா.ஆ–1 ஆவணம் மூலம் 10 செண்ட் சொத்தினை கிரையம் பெற்ற நேதாஜி என்பவரை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்காமல், இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளது நிலைக்கத்தக்கதல்ல என்றால், சரியல்ல.

14. எனது தாத்தாவிற்கு பாகமாக ஒதுக்கப்பட்ட 5 செண்ட் விஸ்தீரணத்தில் மட்டும் தான் நான் பாகம் கேட்க முடியும் என்றும், 25 செண்டில் பாகம் கேட்க இயலாது என்றால், சரியல்ல. எனவே, சரியான சொத்து விவரத்தை குறிப்பிடாமல்

நான் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால், சரியல்ல.

2–ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

2 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணையையே 3 ம் பிரதிவாதி தரப்பிலும் ஏற்றுக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

வாதிகள் தரப்பில் மறுவிசாரணை இல்லை.

**ENDING TIME: 11.31. A.M.**

**(Sd/-. G. Yuvaraj)**

**Special Subordinate Judge,**
**Special Sub Court for L.A.O.P. Cases,**
**Arakkonam.**